# தமிழ்நாடு அரசு

# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

**பிரிவு : TNPSC ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)**

**பாடம் : இந்திய அரசியலமைப்பு**

**பகுதி : பஞ்சாயத்து அமைப்புகள்**

**© காப்புரிமை :**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் **ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு - 4 (தொகுதி 4 & வி ஏ ஓ)** க்கான மென்பாடக்குறிப்புகள், போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது. எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின்கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

## பஞ்சாயத்து அமைப்புகள்(கிராம உள்ளாட்சி அமைப்புகள்)[Art 243-243 O]:

- இந்தியாவில் கிராம பஞ்சாயத்து முறை ஊரக (ம) உள்ளாட்சி பகுதிகளில் சுய அரசாங்கங்கள் அமைய ஏற்படுத்தப்பட்டது.
- மக்கள் தங்கள் நலனை தாங்களே நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவும் தொலைதூரத்தில் உள்ள மக்களுக்கு சேவை செய்யும் நோக்கிலும் கொண்டுவரப்பட்டது..
- 1882 ல் ரிப்பன் உள்ளாட்சி அமைப்புகளை அறிமுகப்படுத்தும் தீர்மானத்தை கொண்டு வந்தார்.
- இத்தீர்மானமே "தல சுய ஆட்சியின் மகாசாசனம்" என அழைக்கப்படுகிறது.
- ரிப்பன் தல சுய ஆட்சியின் தந்தை என அழைக்கப்படுகிறார்.
- பஞ்சாயத்துராஜ் தினம் - ஏப்ரல் 24
- கிராம நியாயாலயா சட்டம் (Gram Nyayalaya Act)02.10.2008.

### பல்வந்தராய் மேத்தா கமிட்டி:

- ❖ 1957 ஜனவரியில் சமூக மேம்பாட்டுத் திட்டம்[Community Development Programme-1952] (ம) தேசிய விரிவாக்கப் பணிகள் [National Extension Services-1953] ஆகியவற்றின் செயல்பாட்டை ஆராய பல்வந்தராய் மேத்தா தலைமையில் 1956-ல் குழு அமைக்கப்பட்டது.
- ❖ இக்குழு 1957 நவம்பரில் அறிக்கை அளித்தது. அவ்வறிக்கையில் மக்களாட்சி பரவலாக்கலை (Democratic Decentralisation) பரிந்துரைத்தது.

### பரிந்துரைகள்:

- ➢ மூன்றடுக்கு பஞ்சாயத்து ராஜ் முறை -
  1.கிராம அளவில் -கிராம பஞ்சாயத்து (அ) கிராம ஊராட்சி
  2.வட்டார அளவில் -பஞ்சாயத்து சமிதி
  3.மாவட்ட அளவில் -ஜில்லா பரிஷத்..
- ➢ கிராம பஞ்சாயத்து பிரதிநிதிகள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

வாய்மையே வெல்லும்

- ஜில்லா பரிஷித் ஆலோசனை (ம) ஒருங்கிணைக்கும் அமைப்பாக[Executive body] இருக்க வேண்டும்.
- ஜில்லா பரிஷித்தின் தலைவராக மாவட்ட ஆட்சி தலைவர் இருக்க வேண்டும்.
- பல்வந்தராய் மேத்தாவின் அறிக்கை பஞ்சாயத்து இராஜ்ய முறையின் மகா சாசனம்.
- பணிகள் மற்றும் பொறுப்புகளை செய்வதற்கு போதிய அளவில் நிதி ஆதாரம் அளிக்கப்பட வேண்டும். இவையனைத்து பரிந்துரைகளும் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பஞ்சாயத்து ராஜ் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.
- 1959, அக்டோபர் 2ல் ராஜஸ்தான் மாநிலம் நாகூய் மாவட்டத்தில் சுதந்திர இந்தியாவின் முதல் பஞ்சாயத்துராஜ் முதல் இந்திய பிரதமர் நேருவினால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது
- 1959-ல் பஞ்சாயத்து ராஜ் அறிமுகம் செய்த 2வது மாநிலம் ஆந்திர பிரதேசம் ஆகும்.
- 1960ல் தமிழ்நாடு உட்பட பெரும்பான்மையான மாநிலங்களில் பஞ்சாயத்து ராஜ் அமைப்பு ஏற்படுத்தப்பட்டன.
- ராஜஸ்தானில் மூன்றடுக்கு முறை (Three Tier System) பின்பற்றப்பட்டது.
- தமிழ்நாட்டில் இரண்டடுக்கு முறை (2 Tier System) பின்பற்றப்பட்டது.
- மேற்கு வங்காளத்தில் நான்கடுக்கு முறை (4 Tier System) பின்பற்றப்பட்டது.
- மகாராஷ்டிரா (ம) குஜராத்தில் ஜில்லா பரிஷித் அதிகாரமிக்கதாக இருந்தது.
- 1963ல் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் நிதி நிலையை ஆராய சந்தானம் தலைமையில் குழு அமைக்கப்பட்டது.

## அசோக் மேத்தா கமிட்டி:

- 1977 - ம் ஆண்டு டிசம்பரில் ஜனதா அரசாங்கத்தால் அசோக் மேத்தா தலைமையில் பஞ்சாயத்து ராஜ் நிறுவன கமிட்டி உருவாக்கப்பட்டது.
- 1978 - ஆகஸ்டில் தனது அறிக்கையை இக்குழு சமர்ப்பித்தது.
- மேலும் சீர்கேடு அடைந்து வரும் பஞ்சாயத்து ராஜ் அமைப்பை புதுப்பிக்கவும் மற்றும் வலுப்படுத்தவும் 132 - பரிந்துரைகளை முன் வைத்தது.
- இரண்டடுக்கு முறை பஞ்சாயத்து ராஜ் முறையை பரிந்துரைத்தது.

1. வட்டார அளவில் - மண்டல் பஞ்சாயத்து( பல கிராமங்களை உள்ளடக்கியது, 15000-20000 மக்கள் தொகையை கொண்டது.)

2 .மாவட்ட அளவில் - ஜில்லா பரிஷத்

- இக்குழுவின் பரிந்துரைகளை செயல்படுத்துவதற்கு முன்னரே ஜனதா அரசாங்கம் கலைக்கப்பட்டதால், இதன் பரிந்துரைகளை செயல்படுத்த முடியவில்லை.
- பல்வந்தராய் மேத்தா (ம) அசோக் மேத்தா குழுக்கள் நகராட்சி அமைப்புகள்(Municipalities) (அ) நகர உள்ளாட்சி அமைப்புகளின் (Urban Local Bodies) எதிர்கால அக்கறை பற்றி ஆராயவில்லை.

**G.V.K.ராவ் கமிட்டி:**

- 1985-ல் நிர்வாக செயலாக்கம்(Asministrative Arrangement) பற்றியும், வறுமை ஒழிப்பு திட்டங்கள் (Un Poverty) பற்றி ஆராய திட்டக்குழு G.V.K.ராவ் கமிட்டியை அமைத்தது.
- இக்குழு 1986-ல் அறிக்கை அளித்தது.
- பஞ்சாயத்து ராஜ் அமைப்பை பன்முகப்படுத்தி அதன் செயல்பாடுகளை அதிகாரம் பெற்றவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என் பரிந்துரைத்தது.

**L.M. சிங்வி கமிட்டி:**

- 1986ல் இராஜிவ் காந்தி அரசாங்கம் பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளுக்கு புத்துயிர் ஊட்ட L.M. சிங்வி கமிட்டியை அமைத்தது.
- இக்குழு கிராமங்களை மறுசீரமைக்கவும், நியாய பஞ்சாயத்து அமைப்புகளை அமைக்கவும் பரிந்துரைத்தது.

**L.C. ஜெயின் கமிட்டி:**

- ✓ 1996ல் தமிழ்நாடு மாநில திட்டக்குழு துணைத்தலைவர் L.C. ஜெயின் தலைமையில் தமிழ்நாடு அரசு குழுவை அமைத்தது.
- ✓ இக்குழு 1997-ல் அறிக்கை அளித்தது.
- ✓ மூன்றடுக்கு பஞ்சாயத்து ராஜ் முறையை பின்பற்றி அவ்வமைப்புகளுக்கு அதிகாரம் வழங்க பரிந்துரைத்தது.

## கோ.சி.மணி கமிட்டி:

- ❖ 11.11.1997-ல் தமிழ்நாடு அரசு உள்ளாட்சி அமைப்புகளை ஆராய உள்ளாட்சித்துறை அமைச்சர் கோ.சி.மணி தலைமையில் குழு அமைத்தது.
- ❖ இக்குழு 10.01.1999-ல் அளித்த அறிக்கையில் பஞ்சாயத்து அமைப்புகளை சீரமைக்க 1209 பரிந்துரைகளை வழங்கியது.

## 73 மற்றும் 74- வது சட்ட திருத்தம்:

- 1991, செப்டம்பரில் நரசிம்மராவ் அரசங்கம் புதிய பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் (ம) புதிய நகராட்சி அமைப்புகளை ஏற்படுத்த 73 மற்றும் 74வது சட்டதிருத்த மசோதாவை பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியது.
- 1992-ல் இம்மசோதாக்கள் பாரளுமன்றத்தில் நிறைவேறியது.
- 73 வது சட்டதிருத்ததின் படி 12வது அட்டவணை (ம) Part-IX-ல் (Art 243 முதல் 243 O வரை பஞ்சாயத்து ராஜ் தொடர்பான விதிகள் சேர்க்கப்பட்டது.
- 74 வது சட்ட திருத்த படி 12வது அட்டவணை (ம) Part-IX-ல் (Art 243P - Art ZG) அரசியலமைப்பில் புதியதாக சேர்க்கப்பட்டது.
- 73 வது சட்டத்திருத்தம் ஏப்ரல் 24, 1993-ல் நடைமுறைக்கு வந்தது.
- 74 வது சட்டத்திருத்தம் ஜீன் 1,1993-ல் நடைமுறைக்கு வந்தது.
- 73வது திருத்தச் சட்டம் பஞ்சாயத்துக்களுக்கும் 74வது திருத்தச்சட்டம் நகராட்சிகளுக்கும் அரசியலமைப்பு ரீதியான அங்கீகாரம் வழங்குகின்றன.
- 73,74 வது சட்டதிருத்தங்கள் ஜம்மு காஷ்மீர், மேகாலயா, மிசோராம், நாகலாந்து, டெல்லி ஆகியவற்றை கட்டுப்படுத்துகிறது.
- உள்ளாட்சி அமைப்புகள் தங்கள் நிதித் தேவைக்கு அரசின் நிதியினங்களையே அதிகம் சார்ந்துள்ளது.
- பஞ்சாயத்து அமைப்புகள் சட்டம் இயற்றக்கூடிய துறைகள் எண்ணிக்கை: 29 (11 வது அட்டவணையில் வரையறுக்கப்பட்டுள்ளது)
- தமிழ்நாடு உள்ளாட்சி முறை நடுவர் மன்றச் சட்டம் 2014 -ல் இயற்றப்பட்டது. உள்ளாட்சி அமைப்புகளில் நடைபெறும் முறைகேடுகளை விசாரிக்க நடுவர் மன்றத்தை அமைத்தது.

## மூன்றடுக்கு பஞ்சாயத்து முறை:

- பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் மூன்றடுக்கு முறை கொண்டது.
    - I. கிராம ஊராட்சி(Village Panchayat),
    - II. ஊராட்சி ஒன்றியம்(Panchayat Union)
    - III. மாவட்ட ஊராட்சி(District Panchayat)
- கிராம உள்ளாட்சி அமைப்புகள் பொருளாதார (ம) சமூக நீதியை மேம்படுத்த திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தப்படுகிறது.
- 73 வது சட்டத்திருத்தத்தின்படி 1994-ல் தமிழ்நாடு புதிய ஊராட்சிகள் (அ) உள்ளாட்சி சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டம் 2006-ல் திருத்தப்பட்டது.

## கிராம ஊராட்சி(Village Panchayat):

- கிராம அளவிலான அமைப்பாகும்.
- பஞ்சாயத்ராஜ் அமைப்புகளின் அடித்தளமாக விளங்குகிறது.
- தலைவர் (ம) உறுப்பினர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவர்.
- துணை தலைவர் உறுப்பினர்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுவர்.
- கிராம பஞ்சாயத்து உறுப்பினர்களின் எண்ணிக்கை 5-15 வரை இருக்கலாம்.
- கிராம பஞ்சாயத்தின் ஆய்வாளர் மாவட்ட ஆட்சி தலைவர்.
- கிராம பஞ்சாயத்தின் வருவாய் இனங்கள் தொழில் வரி, குடிநீர் வரி, சுங்க வரி.

## கிராம சபை:

- கிராம பஞ்சாயத்தின் சட்ட முறை அமைப்பாக விள்ங்குகிறது.
- கிராம சபையின் உறுப்பினர்கள் - அக்கிராமத்திலுள்ள தகுதியுள்ள வாக்காளர்கள் (கிராம மக்கள்).
- கிராமசபை நேரடி மக்களாட்சி தத்துவத்தை பெற்றுள்ளது.
- கிராமசபையின் தலைவர் கிராம பஞ்சாயத்து தலைவர்.
- கிராம சபை ஆண்டிற்கு 4 முறை கூட்டப்படும்.
    1. ஜனவரி 26 - குடியரசு தினம்
    2. மே 1 - தொழிலாளர் தினம்
    3. ஆகஸ்ட் 15 - சுதந்திர தினம்
    4. அக்டோபர் 2 - காந்தி ஜெயந்தி

**ஊராட்சி ஒன்றியம் (Panchayat Union):**

- பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் 2 வது (ம) இடைமட்ட அமைப்பாக செயல்படுகிறது.
- பல ஊராட்சி(கிராம ஊராட்சிகள்) ஒன்றிணைந்ததே ஊராட்சி ஒன்றியம் ஆகும்.
- ஊராட்சி ஒன்றியத்தின் பணிகளை மேற்கொள்பவர் (ம) மேற்கொள்ளும் அலுவலகம் வட்டார வளர்ச்சி அலுவலர், வட்டார வளர்ச்சி அலுவலகம்.
- ஊராட்சி ஒன்றியங்களை மேற்பார்வையிடுவது மாவட்ட ஊராட்சி முகமை.
- தலைவர் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர். துணை தலைவர் மறைமுகமாக உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- தமிழ்நாட்டில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் -385

**மாவட்ட ஊராட்சி (District Council):**

- பஞ்சாயத்து ராஜ் அமைப்புகளின் 3வது (ம) மேல் அடுக்காக செயல்படுகிறது.
- தலைவர் (ம) துணை தலைவர் மறைமுகமாக உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுவர்.
- இதன் உறுப்பினர்கள் 50000 மக்கள் தொகைக்கு ஒரு உறுப்பினர் வீதம் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவர்.
- மாவட்ட ஊராட்சி குழு மாவட்டத்தின் வளர்ச்சி திட்டத்தை தயாரிக்கிறது.
- மாவட்ட ஊராட்சி திட்டக்குழுவின் தலைவர் மாவட்ட ஊராட்சி குழு தலைவர்.
- மாவட்ட திட்டக் குழுவின் உறுப்பினர்கள் மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள், அம்மாவட்டத்திலுள்ள சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள்.
- மாவட்டத்தில் அமைக்கப்படும் குழுக்களில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் இடம் பெற்றால் அக்குழுவின் தலைவர் மாவட்ட ஊராட்சி குழு தலைவர்.
- மாவட்டத்தின் வளர்ச்சி திட்ட்ங்கள் (ம) பணிகளை நிறைவேற்றுபவர் மாவட்ட ஆட்சி தலைவர்.

| | |
|---|---|
| சரத்து 243 | பஞ்சாயத்து அமைப்புகளுக்கு வரையறை வழங்குகிறது.(Definition of Panchayats) |
| சரத்து 243A | கிராமசபை பற்றி குறிப்பிடுகிறது(Gram Sabha) |
| சரத்து 243B | மூன்றடுக்கு பஞ்சாயத்து முறை பற்றி கூறுகிறது.(Constitution of Panchayats) |
| சரத்து 243C | பஞ்சாயத்து கட்டமைப்பு மற்றும் உறுப்பினர் எண்ணிக்கை பற்றி குறிப்பிடுகிறது |
| சரத்து 243D | பஞ்சாயத்து அமைப்புகளில் இடஒதுக்கீடு பற்றி கூறுகிறது |
| சரத்து 243E | பஞ்சாயத்து அமைப்புகளில் பதவிகாலம் பற்றி கூறுகிறது.(Duration of Panachayats). |
| சரத்து 244F | பஞ்சாயத்து அமைப்புகளில் உறுப்பினர் தகுதியிழப்பு பற்றி கூறுகிறது.(Disqualification for membership). |
| சரத்து 243G | ஊராட்சிகளின் அதிகாரங்கள், அதிகார அமைப்புகள், பொறுப்புகள் ஆகியன பற்றி குறிப்பிடுகிறது. |
| சரத்து 243H | ஊராட்சி அமைப்புகளின் வரிவிதிக்கும் அதிகாரம் மற்றும் நிதிகள். |
| சரத்து 243I | நிதிநிலையை மறுஆய்வு செய்ய நிதி ஆணையத்தை அமைத்தல். |
| சரத்து 243J | ஊராட்சிகளின் கணக்குகளைத் தணிக்கை செய்தல். |
| சரத்து 243K | ஊராட்சிகளுக்குத் தேர்தல்கள். |
| சரத்து 243L | யூனியன் பிரதேசங்களில் பஞ்சாயத்து அமைப்புகள் அமைப்பது பற்றி குறிப்பிடுகிறது. |
| சரத்து 243M | Part-IX பொருந்தாத சில பகுதிகள் (Part not apply to certain areas) பற்றி குறிப்பிடுகிறது. |
| சரத்து 243N | பஞ்சாயத்து மற்றும் ஏற்கனவே உள்ள சட்டங்கள் பற்றி குறிப்பிடுகிறது. |
| சரத்து 243O | ஊராட்சி அமைப்பு தேர்தல் நடவடிக்கைகளில் நீதிமன்றம் தலையிடுதலை தடை செய்கிறது. |

**PART-IX A நகராட்சி அமைப்புகள் (அ) நகர உள்ளாட்சி அமைப்புகள்:**

(Municipalities or Union local Bodies)- (Art243P- 243G)

→ அரசியலமைப்பின் 12-வது அட்டவணையில் 18 வகையான அதிகாரங்கள் (ம) பொறுப்புகளை பெற்றுள்ளது.

→ நகராட்சி அமைப்புகள் 3 அடுக்கு முறை கொண்டது.

1. பேரூராட்சி (Town Panchayat),
2. நகராட்சி (Municipality)
3. மாநகராட்சி (Corporation)

→ மேற்கண்ட நகராட்சி அமைப்புகள் தவிர மற்ற நகராட்சி அமைப்புகளும் செயல்படுகின்றன.

1. நகரியம் (Township)
2. இராணுவ குடியிருப்பு வாரியங்கள்
3. குறிப்பிட்ட பகுதி குழுக்கள்
4. நகர எல்லைப் பகுதி குழுக்கள்
5. துறைமுக பொறுப்பு கழகம்
6. சிறப்பு பயன்பாட்டு முகமைகள்

→ இராணுவ குடியிருப்பு வாரிய சட்டம்

**பேரூராட்சி (அ) நகர்ப்புற ஊராட்சி (Town Panchayat):**

- குறைந்த பட்ச மக்கள் தொகை 10000
- தலைவர் (ம) உறுப்பினர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவர்.
- துணை தலைவர் உறுப்பினர்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுவர்.
- பேரூராட்சிகள் பேரூராட்சிகள் இயக்குநரின் கட்டுப்பாட்டில் இயங்கும்.
- பேரூராட்சிகளின் நிர்வாகம் மேற்கொள்பவர் செயல் அலுவலர்.
- பேரூராட்சிகள் முக்கிய வருவாய் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர்வரி
- தற்போது தமிழ்நாட்டில் 561 பேரூராட்சிகள் உள்ளது.

**நகராட்சிகள்**:

- குறைந்த பட்ச மக்கள் தொகை 100000
- மத்திய மாநில அரசுகள் இயற்றும் நகராட்சி சட்டங்கள் மூலம் ஏற்படுத்தப்படும்.
- ஊரக (ம) நகர்ப்புற பகுதிகளை நகராட்சியாக அறிவிக்கும் அதிகாரம் மாநில அரசு பெற்றுள்ளது.
- தலைவர் (ம) உறுப்பினர்கள் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவர்.
- துணை தலைவர் உறுப்பினர்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுவர்.
- நகராட்சி நிர்வாகம் மேற்கொள்பவர் நகராட்சி ஆணையர்.
- நகராட்சியின் முக்கிய வருவாய் சொத்துவரி, தொழிரில்வரி, குடிநீர்வரி, வீட்டுவரி தொழில் வரி, கேளிக்கை வரி,.
- தற்போது தமிழ்நாட்டில் உள்ள நகராட்சிகள் 125.

**மாநகராட்சி**:

- நகராட்சி அமைப்புகளில் மிக உயர்ந்த அமைப்பு, குறைந்த பட்ச மக்கள் தொகை 10,00,000.
- இந்தியாவின் முதல் நகராட்சி (ம) மாநகராட்சி சென்னை(1688)
- இந்தியாவின் 2-வது மாநகராட்சிகள் மும்பை (ம) கொல்கத்தா (1726)
- மாநில சட்ட மன்றம் இயற்றும் மாநகராட்சிகள் சட்டம் மூலம் மாநகராட்சிகள் ஏற்படுத்தப்படும்.
- மிகப் பெரிய மாநகராட்சிகள் பெருமாநகரப் பகுதிகள் ஆகும்.
- மாநகராட்சியின் தலைவர் மேயர் மாநகராட்சியின் தந்தை (அ) முதல் குடிமகன் மேயர்.
- மாநகராட்சி கவுன்சிலர்கள் (ம) மேயர் மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப்படுவர்.
- துணை மேயர் கவுன்சிலர்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுவர்.
- மாநகராட்சியின் நிர்வாக பணிகளை மேற்கொள்பவர் - மாநகராட்சி ஆணையாளர்.
- முக்கிய வருவாய் சொத்துவரி, குடிநீர்வரி, தொழில்வரி, விளம்பரவரி, கேளிக்கைவரி.
- தற்போது தமிழ்நாட்டில் உள்ள மாநகராட்சிகள்-12.

| | |
|---|---|
| சரத்து 243P | நகராட்சி அமைப்புகளுக்கு வரையறை வழங்குகிறது.(Definition of Municipalities) |
| சரத்து 243Q | நகராட்சி அமைப்புகளின் மூன்று வகைகள் பற்றி குறிப்பிடுகிறது. (Constitution of Municipalities) |
| சரத்து 243R | நகராட்சி அமைப்புகளில் கட்டமைப்பு பற்றி குறிப்பிடுகிறது. (Composition of Municipalities) |
| சரத்து 243S | நகராட்சி அமைப்புகளில் வார்டு கமிட்டி அமைப்பு பற்றி கூறுகிறது.(Constitution and Composition of Ward Committes) |
| சரத்து 243T | நகராட்சி அமைப்புகளில் இடஒதுக்கீடு பற்றி கூறுகிறது.(Reservation of Seats) |
| சரத்து 243U | நகராட்சி அமைப்புகளில் பதவிகாலம் பற்றி கூறுகிறது.(Duration of Municipalities) |
| சரத்து 244V | நகராட்சி அமைப்புகளில் உறுப்பினர் தகுதியிழப்பு பற்றி கூறுகிறது.(Disqualification for membership) |
| சரத்து 243W | ஊராட்சிகளின் அதிகாரங்கள், அதிகார அமைப்புகள், பொறுப்புகள் ஆகியன பற்றி குறிப்பிடுகிறது. |
| சரத்து 243X | நகராட்சி அமைப்புகளின் வரிவிதிக்கும் அதிகாரம் மற்றும் நிதிகள். |
| சரத்து 243Y | நிதிநிலையை மறுஆய்வு செய்ய நிதி ஆணையத்தை அமைத்தல். |
| சரத்து 243Z | நகராட்சி அமைப்புகளில் கணக்குகளைத் தணிக்கை செய்தல். |
| சரத்து 243ZA | நகராட்சி அமைப்பு தேர்தல்கள் பற்றி கூறுகிறது |
| சரத்து 243ZB | யூனியன் பிரதேசங்களில் நகராட்சி அமைப்புகள் அமைப்பது பற்றி கூறுகிறது |
| சரத்து 243ZC | Part-IX A பொருந்தாத சில பகுதிகள் (Part not apply to certain areas) பற்றி குறிப்பிடுகிறது |
| சரத்து 243ZD | மாவட்ட திட்டக்குழு பற்றி கூறுகிறது |
| சரத்து 243ZE | பெரும் மாநகர திட்டக்குழு பற்றி கூறுகிறது |
| சரத்து 243ZF | நகராட்சிகள் மற்றும் ஏற்கனவே உள்ள சட்டங்கள் பற்றி குறிப்பிடுகிறது. |
| சரத்து 243ZG | நகராட்சி அமைப்பு தேர்தல் நடவடிக்கைகளில் நீதிமன்றம் தலையிடுதலை தடை செய்கிறது. |